# Volume 1

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான். (லூக்கா 14:15)


**THE SCRIPTURE FEAST MINISTRIES**

**REV: PAUL BENJAMIN**

**FOUNDER AND AUTHOR**

**REGD OFFICE:**

**NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM, GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 . TAMIL NADU, SOUTH INDIA**

**Mobile : + 91 94456 35860 +91 73583 23277**

**Web : www.scripturefeast.net, Blog : www.scripturefeast.info**

**Email: scripturefeast@gmail.com**

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியங்கள்

1.பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்

2.பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்

3.தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.

4.பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.

5.வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்

6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.

7.தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.

8.வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.




@ One among the The Bride in 1000 generation years kingdom

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்

## தலைப்பு ஒன்று

## பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது. மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

பொருளடக்கம்


* **மதிப்புரை**
* **முன்னுரை**
* **ஆசிரியர் உரை**


1-0 பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது. மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

2-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

3-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

4-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்.

5-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ / இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்.

6-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்// இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.

7-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

8-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

**9-0** தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் மூலம் பரலோக இராஜ்ஜியத்தை திறக்கிறவர்களின் அடையாளங்கள்

**10-0** தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்// இருதயத்தில் நிற்கக் காணும்போது,

மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் மூலம் பரலோக இராஜ்ஜியத்தை பூட்டுகிறவர்ககளின் அடையாளங்கள்

.

## முடிவுரை

**மதிப்புரை / Foreword**

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

**APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men

(Heb. 12.14)**'**

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ** President
**G.SUKUMAR SAMUEL** Hon.secretary
**K.R. SELWIN** Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று,தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள்:- | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள்:- |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னு டைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை.

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார்.

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு

விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1.ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.

## ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம்.

தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

தரிசனம் :- கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

எழுத்தின்படி பொருள் :- காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

ஆவியின்படி பொருள் :- தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

ஞான அர்த்தத்தின்படி பொருள் :- கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம். அல்லேலூயா, ஆமென்.

## பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில்

**நின்றுகொண்டிருக்கிறது ஆகையால் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் கிறிஸ்தவ மதம் தள்ளப்பட்டு ஜனங்களினால் நிராகரிக்கப்படுகிறது**.

தானியேல் தீர்க்க தரிசனத்தின்படி, கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த /பெரிய சபைகளின் பிரிவினைகளையும் மார்க்க பேதங்களையும் பின்பற்றுகிறவர்கள் அன்றாட பலியாகிய மனந்திரும்புதலை முடிவுக்கு கொண்டு வந்து: மனிதனால் உருவாக்கப்பட்ட கற்பனைகளை சபையின் மூல உபதேச வசனங்களாக போதித்து; இவைகளை தேவனுடைய ஆலயமாகிய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாகவும் / பாழாக்குகிற அருவருப்பாகவும் நிறுத்தியிருக்கிறார்கள். இதனால் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுகிறவர்களுடைய இரட்சிப்பு மரணமடைகிறது

ஆகையால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது, முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?

மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

பரிசுத்த ஸ்தலத்தில் நின்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து தங்கள் இருதயத்தில் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் தேவனுடைய ஏழு முத்திரைகள் மூலம் அடையாளம் போட்டு; ஆவிக்குரிய யூதர்களை கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக பிரிதெடுக்கப்பட்டு முன்மாரி, பின்மாரி மழையின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தாகிய தேவனுடைய சத்தியமான வசனங்களை புசித்து, ஆவியில் மறுருபமடைந்து: பரிசுத்தவான்களுடைய நீதிகளாகிய சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொண்டு; ஏழாவது ஆயிரம் வருடமாகிய தேவனுடைய ஒய்வு நாளை, தேவனுடைய இராஜ்யமாக இந்த பூமியிலே ஸ்தாபிக்க ஆயத்தமாகிறார்கள்.

பரிசுத்த ஸ்தலத்தில் நின்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றுகிறவர்களையும், தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களையும், கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கை துரோகிகளையும், காட்டொலிவ மரமாகிய கிறிஸ்துவ மதத்தையும் அதன் உட்பிரிவுகளை பின்பற்றுகிறவர்களையும், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தள்ளிவிட்டு நியாயத்தீர்ப்புக்கு நியமிக்கிறார்.

தேவனால் தள்ளிவிடப்பட்ட இவர்கள் ஆயிரம் வருட ஆட்சியில் முதல் ஏழு வருடங்களில் நடைபெறுகிற உபத்திரவகாலம் மற்றும் மகா உபத்திரவகாலத்திற்கு பங்கடைய ஆயத்தமாகிறார்கள். தேவனுடைய ஒய்வு நாளை குறித்து எழுதப்பட்ட பிரமாணங்களுடைய ஆசீர்வாதங்களும், சாபங்களும் ஆயிரம் வருட ஆட்சியாகிய தேவனுடைய இராஜ்யத்தில் உடனே நடைமுறைக்கு வருகிறது. அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்.

இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் ( பாஷைகள் தாறுமாறாகயிருக்கிற கிறிஸ்தவ மதம்) விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.

அவளுடைய ( மகா பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்தின்) வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்.

பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய (மகா பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்தின்) பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு ( மகா பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்திற்கு) நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு (மகா பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்தை) விட்டு வெளியே வாருங்கள்.

அவளுடைய (மகா பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்தின்) பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார். அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப்

பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள். Rev 18:1-6

அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. 1Co 2:6-8

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்

## தலைப்பு ஒன்று

### பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது. மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

1-0 பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறது தேவனுடைய இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

1-1 கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தேவனை தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை/ பாழாக்குகிற அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிறுத்தினவர்களின் ஆடையாளங்கள்

1-2 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தேவனை தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை/ பாழாக்குகிற அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிறுத்தினவர்களின் ஆடையாளங்கள்

1-3 பழைய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனார்கள்./ பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினார்கள்

1-4 புதிய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனார்கள்./ பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினார்கள்

1-5-0 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளின் அடையாளங்கள்

1-6-0 பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட மணவாட்டிகள் பரலோகராஜ்யத்தை திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

1-0 பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறது தேவனுடைய இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். . ( Mat 24:14)

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். Mat 24:1-2

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தேவனை தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக இஸ்ரவேல் வம்சத்தார் பலிபீடத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பு நிறுத்தியிருக்கிறார்கள் ஆகையால் இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று கட்டளையிட்டார்.

1-1 கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தேவனை தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை/ பாழாக்குகிற அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிறுத்தினவர்களின் ஆடையாளங்கள்:-

அவர் என்னைப்பார்த்து: மனுபுத்திரனே, உன் கண்களை ஏறெடுத்து, வடக்கே பார் என்றார்; அப்பொழுது நான் என் கண்களை ஏறெடுத்து, வடக்கே பார்த்தேன்; இதோ, பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன்; நடையிலே எரிச்சலுண்டாக்குகிற அந்த விக்கிரகம் இருந்தது. Eze 8:5

அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா? என் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு என்னைத் தூரமாய்ப் போகப்பண்ணும்படியான இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொல்லி, Eze 8:6

என்னைப் பிராகாரத்தின் வாசலுக்குக் கொண்டுபோனார்; அப்பொழுது இதோ, சுவரில் ஒரு துவாரத்தைக் கண்டேன். அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ சுவரிலே துவாரமிடு என்றார்; நான் சுவரிலே துவாரமிட்டபோது, இதோ, ஒரு வாசல் இருந்தது. அவர் என்னைப்பார்த்து: நீ உள்ளே போய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார். Eze 8:7-9

நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. Eze 8:10

இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன் தன் கையிலே தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. Eze 8:11

அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார். Eze 8:12

1-2 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு தேவனை தூரமாய்ப் போகப்பண்ணும்படியாக எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை/ பாழாக்குகிற அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிறுத்தினவர்களின் ஆடையாளங்கள்:-

இயேசு ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: தேவாலயத்தின் கட்டடங்களுடைய ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு

எல்லாம் இடிக்கப்பட்டுப்போவது எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். Mat 24:1-3

1-2-1 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

1-2-2 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், தேவாலயத்தின் கட்டடங்களுடைய ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போவது, மற்றும் மனுஷகுமாரனுடைய வருகைக்கும், உலகத்திற்கும் முடிவு உடனே வராது. (Mat 24:4-6)

1-2-3 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்;

1-2-4 பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். Mat 24:7-8

1-2-5 அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

1-2-6 அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். Mat 24:9-13

பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிறுத்தினவர்களின் ஆடையாளங்களை தேவனுடைய இராஜ்யத்தினுடைய சுவிசேஷமாக பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது அவருடைய சீஷர்கள் கிழே குறிப்பிட்டு கேட்ட மூன்று கேள்விகளுக்கு முடிவு வரும் (Mat 24:14, Mat 24:1-3)

1 தேவாலயத்தின் கட்டடங்களுடைய ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போவது எப்பொழுது சம்பவிக்கும்?

2 மனுஷகுமாரனுடைய வருகைக்கு அடையாளம் என்ன?

3 உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்ன?

1-2-7 அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும்

வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். Mat 24:23-24

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். 2Th 2:7-8

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். 2Th 2:9-10

ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். 2Th 2:11-12

1-2-8 இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். Mat 24:25-27

1-3 பழைய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனார்கள்./ பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினார்கள்:-

மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள். (யாத்திராகமம் 32:1)

அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது என்றான். (யாத்திராகமம் 32:24)

ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள். (யாத்திராகமம் 32:5-6)

ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள்.(1கொரிந்தியர் 10:7) இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். (1கொரிந்தியர் 10:11-12)

1-4 புதிய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனார்கள்./ பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினார்கள்:-

(உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள புதிய ஏற்பாடு தேவனுடைய ஜனங்களாகிய நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிற; மேலே குறிப்பிட்ட பழைய ஏற்பாட்டினுடைய திருஷ்டாந்தங்களின் பொருளடக்கம்)

மேலே குறிப்பிட்ட பழைய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல; புதிய ஏற்பாடு தேவனுடைய ஜனங்களும் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்து சிலர் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகாராதனைக்காரர் ஆனார்கள்

கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை புதிய ஏற்பாடு கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகள்/ ஏழு ஸ்திரீகள் கண்டபோது, அவர்கள் ஆரோன்/ஆரோனுடைய சந்ததியாரிடத்தில் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி: எகிப்தின் அநித்தியமான பாவசந்தோஷங்களிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்து, இரட்சிப்பை கொடுத்த அந்த கிறிஸ்துவிற்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீங்கள் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தேவனுடைய ஆராதணை முறைகளை எங்களுக்காக உண்டுபண்ணுங்கள் என்றார்கள்.

அப்பொழுது ஆரோன்/ஆரோனுடைய சந்ததியார்கள் கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகள்/ ஏழு ஸ்திரீகள் பின்பற்றுகிற கீழே குறிப்பிட்ட உபதேசங்களின் ஆலோசனைகளை கேட்டு, அவைகளை பகுத்து,பிரித்து, வரிசைப்படுத்தினபோது மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகள்: கிறிஸ்தவ மதத்தின் பிரிவினைகளோடு கலந்த மார்க்கபேதங்களின் சபை உபதேசங்களாக வெளிப்பட்டது.

1 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் மூல உபதேசங்கள்
2 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் பிரிவினைகளின் உபதேசங்கள்
3 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் மார்க்க பேதங்களின் உபதேசங்கள்
4 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் மனிதனுடைய உபதேசங்கள்
5 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் முன்னோர்களின் உபதேசங்கள்
6 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் ஜாதிகளின் உபதேசங்கள்
7 கிறிஸ்தவ சபை/ இருதயத்தில் விக்கிரகங்களின் உபதேசங்கள்

புதிய ஏற்பாடு தேவனுடைய ஜனங்கள் / கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகள்/ ஏழு ஸ்திரீகள் தங்கள் விரும்பின தேவனுடைய வார்த்தைகளை தங்கள் சொந்த ஆவி ஆத்துமாவின் ஆகாரமாக புசித்து, தங்கள் சொந்த நீதியின் கிரியைகளை வெளிப்படுத்துவதற்காக தங்கள் விரும்பின வண்ணங்களில் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு; ஒரே பூரண புருஷனாகிய கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டு எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு கிறிஸ்துவின் பெயர் மாத்திரம் எங்கள்மேல் கிறிஸ்தவர்கள் என்று விளங்கட்டும் என்பார்கள். (ஏசாயா 4:1)

இப்படிப்பட்ட மனுஷருடைய கற்பனைகளையும் கிறிஸ்தவ மதத்தின் பிரிவினைகளோடு கலந்த மார்க்கபேதங்களையும் சபையின் உபதேசங்களாகப் போதித்து, வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்து; பின்பு ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்திருக்கும் இந்த ஆராதனை முறைகள்: பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரக ஆராதனையாகவும், பாழாக்குகிற அருவருப்பாகவும் நின்றுகொண்டிருக்கிறது (1கொரிந்தியர் 10:7,மத்தேயு 15:9, ஏசாயா 29:13)

1-5-0 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளின் அடையாளங்கள்

1-5-1 பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருக்காமல் தேவனுடைய சபையாகிய ஸ்திரீயை தீட்டுப்படுத்தி கறைப்படுத்துகிறார்கள்:-

இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும் போது செய்து கொண்ட கிறிஸ்துவின் விசுவாச உடன் படிக்கையில் முடிவு வரை நிலைத்திருக்காமல், பாதியிலே மீறினபடியால்: கற்புள்ள கன்னிகை என்ற நல்ல பெயரை இழந்து, தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினவர்கள் உடன் படிக்கையின் துரோகிகள்.

இவர்கள் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் மாயைகளையும் பொய்களையும் பின் தொடர்ந்து பரிசுத்த ஸ்தலத்தை/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தை பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாட பலியாகிய மனந்திரும்புதலை முடிவுக்கு கொண்டு வந்து தேவனுடைய சபையாகிய ஸ்திரீயை தீட்டுப்படுத்தி கறைப்படுத்துகிறார்கள்

2Co_11:2-3, 2Th_2:1-12; Jer_2:20-25, Mat_25:1-4,Eph_4:30, Mal_2:15-16,Rev_14:4-5, Isa_4:1-6,

1-5-2 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை /

பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் விடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தை அசட்டைபண்ணி தங்களுடைய ஊழியங்களுக்கு போய்விட்டார்கள்:-

1 அநேகர் தன் வயலுக்கு/ ஊழியத்திற்கு போய் விட்டார்கள்

2 அநேகர் தன் வியாபாரத்துக்கு/ பொருளாசையை பின் தொடர்ந்து போய் விட்டார்கள்.

3 அநேகர் தேவனுடைய ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தினார்கள்.

4 அநேகர் தேவனுடைய ஊழியக்காரரைப் பிடித்து, கொலை செய்தார்கள்.

5 அநேகர் நான் ஒரு வயலை / ஊழியத்தைக்கொண்டேன், நான் அகத்தியமாய்ப்போய், அதைப்பார்க்க வேண்டும், என்றார்கள்.

6 அநேகர் நான் ஐந்தேர்மாடு/ ஐந்து வகையான ஊழியத்தைக் கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன், என்றார்கள்.

7 அநேகர் நான் பெண்ணை விவாகம் பண்ணினேன்/ சபையோடு உடன்படிக்கை பண்ணினேன் அதினால் நான் வரக்கூடாது என்றார்கள். Mat_22:2-9,Luk_14:15-22;Luk_14:23-24,Est_1:9-12,Isa_65:13-16,Pro_9:1-6,

1-5-3 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் கலியாண வஸ்திரமில்லாமல் தங்கள் சுயநீதியின் வஸ்திரம் தரித்து கலியாண விருந்தை புசித்தபடியால் புறம்பான இருளாகிய அறியாமையிலே தள்ளபடுகிறார்கள்:-

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** ஆட்டுக் குட்டியானவருடைய கலியாண வஸ்திரமாகிய சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளாமல்; தங்கள் சுய நீதியின் வஸ்திரம் தரித்துக் கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை, ஆட்டுக் குட்டியானவருடைய கலியாண விருந்தாக இருதயத்திலும் அறிவிலும் புசிக்கிறவர்களை கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளாகிய அறியாமையிலே போடப்படுவார்கள்

Rev_19:7-8, Rev_3:4-5, Rev_3:18, Isa_61:10, Zec_3:3-4, Zep_1:8-9, Mat_22:11-14, Mat_7:21-23, Luk_13:23-27; Rev_16:12-15, Rev_17:13-14, Rev_17:8, Rev_22:14-16, 2Ch_18:18-22; Eze_14:9;

1-5-4 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்; மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவின் சொரூபத்தை வணங்கி தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறார்கள்:-

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழுமுத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் / அறிவில் ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறபோது, அவர்களுடைய இரட்சிப்பு மரணமடைகிறது; மேலும் மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவின் சொரூபத்தை வணங்கி தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவர்களுக்கு கிழே குறிப்பிட்ட தேவனுடைய கோபாக்கினைகள் பின் தொடரும்.

மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன்கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளு கிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். Rev_14:9-12,

1-5-5 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளின் வாதை மகா கொடிதாயிருந்தபடியால். பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை:-.

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவ சுரமண்டலமாகிய இருதயத்தில் தேவ சுரமண்டல இராகங்களை வாசித்து தேவனுடைய இரகசியங்களை கற்றுக்கொண்டு தேவனை துதிக்காமல்: மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு கிழே குறிப்பிட்ட தேவனுடைய கோபாக்கினைகள் பின் தொடரும்

அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது. தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான். Rev_14:9-12, .Rev_13:8-10

1-5-6 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்: தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்களுக்கு கீழ்படியாமல் இருக்கிறபோது வருகிற சாபங்கள் புலம்பலின் பாடலாக மாறுகிறது.

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் சியோனின் பாட்டாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக் குட்டியான வருடைய பாட்டையும் கற்றுக்கொண்டு பாடதவர்களுக்கு; தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசே, மற்றும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய உடன் படிக்கையின் பிரமாணங்கள் மற்றும், எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்கள்; ஆகியவைகளின் மூலம் வருகிற சாபங்கள் புலம்பலின் பாடலாக இவர்களை பின் தொடரும் Lev_26:13-20, Deu_28:15-22

1-5-7 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்: பரிசுத்த ஆவியின் உடன்படிக்கையின் பிரமாணங்களுக்கு கீழ்படியாமல் இருக்கிறபோது தாறுமாறுகளின் ஆவிகளுக்கும் பைத்தியத்தின் ஆவிகளுக்கும் அடிமைப்பட்டு பரிகாசமும் நித்தையையும் அனுபவிக்கிறார்கள்.

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் முன் மாரி மழையாகிய பரிசுத்த ஆவியையும், பின் மாரி மழையாகிய அபிஷேக ஆவியையும்; ஓய்வு நாள் பிரமாணத்தை பின்பற்றி எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களிள் காத்திருந்து எலியாவின் ஆவியை பெற்றுக் கொள்ளாமல்: பரிசுத்த ஆவியின் உடன் படிக்கையை தள்ளி மீண்டும் பாவ மனிதனின் ஆவிக்கு அடிமைப்படுகிறவர்களுக்கு தேவனுடைய கோபாக்கினைகள் பின் தொடரும். Luk_17:30-33,Heb_6:4-8, Heb_10:26-27; Heb_10:28-31, Heb_12:15-17; 2Th_2:1-12; 2Pe_2:20-22

1-5-8 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்: பரிசுத்த ஆவியின் உடன்படிக்கையை முறித்து; மனிதனால் உருவாக்கப்பட்ட ஊழிய அழைப்பை நிறைவேற்றுகிறபோது தேவனுடைய கோபாக்கினைகள் பின்தொடருகிறது.

கிறிஸ்துவின் **இரகசிய வருகையில்** கைவிடப்பட்ட மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற விசுவாச அளவுப் பிரமாணத்தின் ஊழிய அழைப்பை அறிந்து கொண்டு; தேவனுடைய கற்பனைகளையும் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியையும் பின்பற்றி தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றாமல் மனிதனால் உருவாக்கப்பட்ட ஊழிய அழைப்பை நிறைவேற்று கிறவர்களுக்கு கிழே குறிப்பிட்ட வசனங்களின் படி தேவனுடைய கோபாக்கினைகள் பின் தொடரும்

ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்

.Luk_17:30-33;Mat_24:18-21,Mat_7:21-27; Luk_13:22-30; Rev_21:6-8, Rev_22:10-19

1-6-0 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை பின்பற்றினபடியால் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட மணவாட்டிகள் பரலோகராஜ்யத்தை திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்கள்:-

1-6-1 அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ என்று கேட்டான்; அதற்கு அவர்: இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

1-6-2 வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டினபின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்

1-6-3 அப்பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம்பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம்பண்ணினீரே என்று சொல்லுவீர்கள் ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

1-6-4 நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிற வர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்.

1-6-5 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள். அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள், பிந்தினோர் முந்தினோராவார்கள் என்றார். Luk 13: **23**-30

1-6-6 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

1-6-7 அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை

அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (Mat 7:21-23)

1-6-8 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். Luk_13:23-30; Mat_7:21-23, Mat_25:1-12; Rev_22:10-16,Rev_21:6-8;

2-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

2-1 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்கள்

2-2 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்களின் பொருளடக்கம்

2-3 பரிசுத்த ஸ்தலம்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய வேதவசனங்கள்

2-4 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் / தேவனுடைய ஆலயமாகிய இருதயம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய வேதவசனங்களின் பொருளடக்கம்

2-5 நீங்களே தேவனுடைய ஆலயம்

2-6 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலி/ விளக்கு எரிந்துகொண்டிருக்கும்படி எப்பொழுதும் எண்ணெய் ஊற்றுதல் ஆவியின்படி பொருள்

2-7 உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து தினந்தோறும் இரட்சிப்பின் பாத்திரத்தில் எண்ணெயை சேமித்து வைத்தல்

2-8 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலியை பாழாக்குகிற அருவருப்பாக/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக மாற்றுகிற கிரியைகள் ஆவியின்படி பொருள்

**2-9** பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் ஓய்வுநாள் தகனபலியை பாழாக்குகிற அருவருப்பாக/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக மாற்றுகிற கிரியைகள் ஆவியின்படி பொருள்

2-10 புதிய ஏற்பாட்டில் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருந்த பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது

2-11 கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களாகிய களங்கமில்லாத ஞானப்பாலும்' பலமான ஆகாரமாகிய தேவனுடைய நீதியின் வசனங்களும்

2-12 பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்

2-13 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் கிரியைகள்

2-14 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு

2-15 பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற மோசேயின் சத்தத்தை கேட்டு கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்

2-16 புதிய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற தேவனுடைய சத்தத்தை கேட்டு கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்

2-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கக் காணும்போது, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

2-1 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை /

பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்கள்:-

பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியைசெய்து அநுகூலமடைந்தது.

பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக்குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக்குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். (தானியேல் 8:11-14)

ஆனாலும் அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அன்றாடபலியை நீக்கி, பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள். உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப்பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். (தானியேல் 11:31-32)

அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறுநாள் செல்லும். ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான் (தானியேல் 12:10-12)

தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருந்த பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக நின்று கொண்டிருக்கிறது மேலும் இதன் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ( மத்தேயு 24:14, 1பேதுரு 4:17-18)

2-2 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்களின் பொருளடக்கம்:-

பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்.

அன்றாடபலியை நீக்கி, பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்கும் அருவருப்பை பரிசுத்த ஸ்தலத்திலே/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் வைப்பார்கள். அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியைசெய்து அநுகூலமடைந்தது; அப்பொழுது உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப்பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான்.

தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்.

2-3 பரிசுத்த ஸ்தலம்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய வேதவசனங்கள்:-

முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும்; இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்.(எபிரேயர் 9;1-2,) (எபிரேயர் 9;6. எபிரேயர் 9;8-10, லேவிராகமம் 24:1-8)

2-4 தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் / தேவனுடைய ஆலயமாகிய இருதயம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய வேதவசனங்களின் பொருளடக்கம்:-

தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் / தேவனுடைய ஆலயமாகிய இருதயம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு தினந்தோறும் பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் அன்றாடபலியையும் மற்றும் ஓய்வுநாள் தோறும் ஓய்வுநாள் தகனபலியையும் ஆசாரியர்கள் செலுத்த வேண்டும்

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலியை செலுத்துவதின் பொருள் எழுத்தின்படி:-

தேவனுடைய ஆலயமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே/ இருதயத்தில் எப்பொழுதும் குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை தினந்தோறும் ஆசாரியர்கள் ஊற்ற வேண்டும்:-

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலியை செலுத்துவதின் பொருள் ஆவியின்படி:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் இரட்சிப்பின் பாத்திரத்தின் மூலமாக கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு அலட்சியப்படுத்தாமல், எப்பொழுதும் மனந்திரும்பி நற்கிரியைகளுக்கு முன்னேறிச்செல்ல வேண்டும்.

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் ஓய்வுநாள் தகனபலியை செலுத்துவதின் பொருள் எழுத்தின்படி:-

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் ஓய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் பன்னிரண்டு அப்பத்தை சுத்தமான தூபவர்க்கம் போட்டு ஆசாரியர்கள் அடுக்கிவைக்க. வேண்டும்.

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் ஓய்வுநாள் தகனபலியை செலுத்துவதின் பொருள் ஆவியின்படி:-

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் ஓய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் ஓய்வுநாள் பிரமாணத்தை/தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்து கலப்படமில்லாத வேதவார்த்தைகளைக் கொண்டு ஜனங்களுக்கு தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

2-5 நீங்களே தேவனுடைய ஆலயம்:-

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். (1கொரிந்தியர் 3:16-17)

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத்தேயு 6:22-23 )

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. . (மத்தேயு 5:14-16 ) (லூக்கா 11:33-:36) 3-6

சரீரத்தின் கண்/ விளக்கு ஆவியின்படி பொருள்:-
தேவதரிசனங்கள் மனுஷனின் விளக்காயிருக்கிறது.

சரீரத்தின் கண்/ விளக்கு வெளிச்சத்தின் பிரகாசம் ஆவியின்படி பொருள்:-

தேவதரிசனங்கள் மூலம் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம்/ உங்கள் நற்கிரியைகள் மனுஷர் முன்பாகப் வெளிப்படுதல்

சரீரத்தின் கண்/ விளக்குத் தண்டு ஆவியின்படி பொருள்:-
தேவதரிசனங்களின் மூலம் ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணம்

2-6 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலி/ விளக்கு எரிந்துகொண்டிருக்கும்படி எப்பொழுதும் எண்ணெய் ஊற்றுதல் ஆவியின்படி பொருள்:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தேவதரிசனத்தின் நற்கிரியைகள் வெளிப்படுவதற்காக. கடிந்துகொள்ளுதலை எப்பொழுதும் ஏற்றுக்கொண்டு மனந்திரும்புதல்

நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன். (சங்கீதம் 141:5) சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 94:13)

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. ( 2 தீமோத்தேயு 3:16-17)

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:14-16)

2-7 உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து தினந்தோறும் இரட்சிப்பின் பாத்திரத்தில் எண்ணெயை சேமித்து வைத்தல்:-

உன்னிலுள்ள நற்கிரியைகள் துர்கிரியைகளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. தினந்தோறும் உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக.( பிரசங்கி 9:8)

இரட்சிப்பின் பாத்திரத்தில் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு அலட்சியப்படுத்தாமல், எப்பொழுதும்/ தினந்தோறும் மனந்திரும்பி நற்கிரியைகளுக்கு முன்னேறிச்செல்ல வேண்டும்

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலியை செழுத்தாமல் இருப்பது எழுத்தின்படி பொருள்:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தினந்தோறும் விளக்கிற்கு எண்ணெய் ஊற்றாமல் இருக்கிறபோது விளக்கு வெளிச்சம் அணைந்துபோய் புகையை கக்குகிறது / புகைகிற கொள்ளிக்கட்டையாக மாறுகிறது:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் அன்றாடபலியை செழுத்தாமல் இருப்பது ஆவியின்படி பொருள்:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் தினந்தோறும்/ எப்பொழுதும் கடிந்துகொள்ளுதலின் ஆலோசனைகளை அசட்டை பண்ணுகிறபோது, நற்கிரியைகள் துர்கிரியைகளாக மாறி மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்கிறது

ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்.

முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.(எபிரேயர் 6:4-8, எபிரேயர் 10:24-31,2பேதுரு 2:20-22)

2-8 தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில்/ பரிசுத்த ஸ்தலத்தில் அன்றாடபலியை பாழாக்குகிற அருவருப்பாக/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக மாற்றுகிற கிரியைகள் ஆவியின்படி பொருள்:-

எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன்; விபசாரம்பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்; அவர்கள்

எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலும், அதின் குடிகள் கொமோராவைப்போலும் இருக்கிறார்கள். ஆதலால் சேனைகளின் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக்குறித்து: இதோ, நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப் பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்; எருசலேமின் தீர்க்கதரிசிகளிலிருந்து மாயமானது தேசமெங்கும் பரம்பிற்றே என்று சொல்லுகிறார்.

உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என்னை அசட்டைபண்ணுகிறவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல்; தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி: உங்கள்மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள். (எரேமியா 23:14- 16)

**2-9** தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில்/ பரிசுத்த ஸ்தலத்தில் ஓய்வுநாள் தகனபலியை பாழாக்குகிற அருவருப்பாக/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக மாற்றுகிற கிரியைகள் ஆவியின்படி பொருள்:-

ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழி தப்பிப்போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள். போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை. அவர் யாருக்கு அறிவைப் போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்? பால்மறந்தவர்களுக்கும், முலை மறக்கப்பண்ணப்பட்டவர்களுக்குமே.

கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள். பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள். **(ஏசாயா** 28:7-12)

குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள். என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே.(மல்கியா 1:6-7)

அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம்பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வுநாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனாஈனம்பண்ணப்படுகிறேன். (எசேக்கியல் 22:26)

2-10 புதிய ஏற்பாட்டில் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருந்த பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது:-

தேவனுடைய ஆலயமாகிய இருதயம்/ பரிசுத்த ஸ்தலம் பரிசுத்தக்குலைச்சலாக்காமல் இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய: அன்றாடபலி மற்றும் ஓய்வுநாள் தகனபலி, ஆகிய வேதவசனங்களின் பொருளடக்கம் பின்பற்றப்படாமல்; கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகளின் பிரிவினைகளையும் மார்க்கபேதங்களையும் பின்பற்றுகிற ஜனங்களால் உருவாக்கப்பட்ட சபையின் மூல உபதேச வசனங்கள் /கலப்படமான ஞானப்பால் தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில்/ பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக / பாழாக்குகிற அருவருப்பாக நின்றுகொண்டிருக்கிறது.

கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகளின் பிரிவினைகளையும் மார்க்கபேதங்களையும் பின்பற்றுகிற ஜனங்கள் ஜலத்தினால்/ தேவனுடைய வார்த்தைகளினால் மறுபடியும் பிறந்து மனந்திரும்பாமல்; தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்துகொண்டு அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து பேசும்போது தங்களுடைய மாயக்காரனுடைய ஆத்துமா வளச்சியடைய மனுஷரால் போதிக்கப்பட்ட சபையின் மூல உபதேசவசனங்கள்/ கலப்படமான ஞானப்பால்.

1.இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை அறிக்கைசெய்தல்.(ரோமர்10:9-10)
2. பாவமன்னிப்பிற்கு இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுதல்.(அப்போஸ்தலர் 2:38)
3. ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுதல்.(மாற்கு 16:16)
4. அந்நிய பாஷையைப் பெற்றுக்கொள்ளுதல்.(அப்போஸ்தலர் 2:1-4)
5. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல். (எபிரேயர் 10:25)
6. காணிக்கை,தசமபாகம் செலுத்துதல்(மல்கியா 3:8-10)
7. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல்.(1கொரிந்தியர் 11:23-27)
8. தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறுதல்.(மாற்கு 16:15)

2-11 கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களாகிய களங்கமில்லாத ஞானப்பாலும்' பலமான ஆகாரமாகிய தேவனுடைய நீதியின் வசனங்களும்:-

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். Heb 5:12-14

1 செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்,
2 தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்,
3 ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்,
4 கைகளை வைக்குதல்,
5 மரித்தோரின் உயிர்த்தெழுதல்,
6 நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக. Heb 6:1-2

7 நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கு பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வசனம் Heb 5:12-14

பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது:-

விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி; இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது;

இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.
என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. Rom 10:6-11
Rom_10:6-11,Deu_30:11-14,Jer_12:2; Eze_33:31; Mat_7:21; Heb 5:12-14

2-12 பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள் **Rom_1:16, Rom_12:6, Hab_2:1-4,**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தையை தங்கள் வாயினால் அறிக்கை செய்து, தேவனுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் பிரமாணங்கள். Mat_24:14, Mar_13:10, Joh_1:12, Gal_3:26, Exo_19:5, Joh_10:1-13,Rom_4:5, Joh_9:31,

1 நான் என் காவலிலே தரித்து :- என் இருதயத்தில் எல்லா காவலுடன் நான் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு. Pro_4:23, 1Co_16:13, Col_1:22-23,

2 அரணிலே நிலை கொண்டிருந்து :- தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலை கொண்டிருந்து....
,2Co_10:14; Mat_25:15; Rom_12:3-6, Rom_15:20; 1Co_12:11-12; Eph_4:7-13; 1Pe_4:10-11, 1Co_4:6-7, 1Co_12:4-11, 1Co_12:28-31, Hab_2:1-4,

3 அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும்:- தேவன் தம்முடைய அழைப்பின் எந்த சித்தத்தை செய்ய சொல்லுவா ரென்றும் கவனித்துப் பார்ப்பேன். Rom_12:2-6, Eph_1:10, Eph_5:17, Col_4:12, Act_9:6, Phi_2:13,

4 தேவன் என்னை கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும், கவனித்துப் பார்ப்பேன்;-
தேவன் என்னை கண்டிக்கும் போது நான் கடிந்து கொள்ளுதலை அலட்சியம் செய்யமாட்டேன்,என்னை சீர்திருத்தும்படி கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுவேன். Psa_141:5, Pro_13:8, Pro_15:5, Pro_15:31-32, Pro_21:20, Pro_29:15, Tit_1:14, 2Ti_3:15-17,

5 தரிசனத்தை எழுதி :- தேவனுடைய கற்பனைகளை என் இருதயத்தில் எழுதி. Hab_2:2, Deu_6:4-9, Psa_37:31, Pro_3:1-9, Rom_2:14-15, Rom_2:27,

6 குறித்த காலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டி ருக்கிறது:- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தொடர்புடைய கடைசி காலத்திற்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. Dan_7:21,Dan_8:17, Dan_12:9, Rev_1:3, Rev_10:6, Rev_11:18, Job_24:1, Mat_16:3, Luk_12:56, Ecc_8:5-6,

7 முடிவிலே அது விளங்கும் அது பொய் சொல்லாது:- தீர்க்கத்தரிசன நிறைவேறுதல்களில் அது விளங்கும். 1Co_3:13, 2Co_11:15, Mat_24:13

8 அது தாமத்தாலும் அதற்கு காத்திரு:- அது நிச்சயமாகவே வரும் அது தாமதிப்பதில்லை. Pro_23:18, Gen_49:18, Isa_40:18, Isa_49:18, Isa_49:23, Isa_64:4, Psa_42:11, Psa_43:5,

2-13 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் கிரியைகள்

1 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் ஆரம்பம் :- அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு. Joh_1:12, Gal_3:26, Rom_4:1-10, Joh_9:31, Joh_10:1-13, Rom_3:24-28,Tit_3:5, Eph_5:26, Eph_2:8-9, Gal_3:2-7, Gal_5:4-6, Rom_11:6,

2 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தால் நீதிமான் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான் :-

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால் மாம்சத்தின் கிரியைகளை அழித்தால்; விசுவாசத்தில் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான். Rom_1:17, Rom_8:1-4, Rom_8:5-11, Heb_10:36-39,

3 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் ஆவியில் பின்வாங்கி போகுதல் :-

கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, மாம்ச இச்சையின் கிரியைகளை ஆவியில் ஜெயங்கொள்ள முடியாதவர்கள், மாம்ச இச்சைக்கு மீண்டும் அடிமைப்பட்டவர்கள். Rom_8:5-6, Rom_8:13, Pro_14:14, Luk_8:13, 1Ti_6:9-12, Joh_6:51-66,

4 இயேசு கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் கிரியைகளின் வகைகள்:- தேவன் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார். Rom_9:2, Rom_12:2-6, 1Co_12:12 1Co_12:13-27, 1Co_15:38, 1Ti_2:20-21, Eph_4:1-13, Eph_4:13-25, Eph_2:17-22, Col_2:18-22, Phi_2:13, Act_9:6, 1Pe_4:10,

5 ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணம் 2Co_10:12-18,Rom_12:2-6, Eph_4:7, Eph_4:13, Eph_4:16,

6 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தில் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுதல்:- Hab_2:4-6,Eze_36:5, Mal_3:13-18, Mal_4:1-6, 2Ti_2:9, Isa_65:5, Isa_66:17, Psa_83:12, Deu_19:14, Deu_27:17, Amo_6:6-7, Amo_6:13, Hos_8:4, Luk_14:7-11,

7 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினால் ஆவியின் கிரியைகள் இல்லாதவர்கள்:-

கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்து, விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்கள்; கிறிஸ்துவின் ஆவியின் கிரியைகள் இல்லாதபடியால் ஆவியில் செத்தவர்கள்.

Jam_2:14-16, Jam_3:17-18, Mar_16:16, Joh_3:18, Joh_3:36, Joh_6:64, Jud_1:5, Tit_3:8, 1Jo_2:3-6, 1Jo_5:10, Rev_20:12,

2-14 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு :-

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு கிருபையினால் வெளிப்படாமல் கிரியைகளின் மூலம் வெளிப் படுத்தப்படுகிறது. Heb_12:2, Exo_19:5, 2Th_2:3-8, 2Ti_2:12, Rev_1:8, Rev_21:6, Rev_22:13,

1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் இயேசு கிறிஸ்துவின் விசுவாச துரோகிகளின் மேல் தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். .Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12, Mal_2:1-10, Pro_2:16-17,

2 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை தங்கள் வாழ்க்கையின் முடிவு வரை காத்திருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் பாதியிலே உடன்படிக்கையை முறித்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு. Mat_10:22 Mat_24:13, Mar_13:13, Rev_2:26,

3 சத்தியத்தின் மேல் உள்ள அன்பை அங்கீகரித்து தங்களுடைய விசுவாச உடன்படிக்கையையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் காத்துக்கொள்ளாமல் போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு . .2Th_2:9-10, Dan_8:11-12,

4 அக்கிரமத்தின் மிகுதியினால் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகருடைய அன்பு தணிந்து விசுவாசத்தை இழந்து போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு Mat_24:12,

5 இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாச உடன்படிக்கை செய்த நாளில் மரணமடைந்த கேட்டின் மகனாகிய பாவ மனிதன்; மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு பாவ கிரியைகளின் மூலம் வெளிப்படும்போது அவனுடைய விசுவாச உடன்படிக்கை அவனால் முறிக்கப்படுகிறது. . Rom_6:2-11, Rom_8:9-14, Col_2:11-12, 2Th_2:3, Eph_4:22-24,

6 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை நிலை நிறுத்துகிற பரிசுத்த ஆவி தேவனால் நீக்கப்படும்போது; தேவன் அந்த ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையை முறித்துப் போடுகிறார். Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12,

7 தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய விரும்பாதபடியால் பொய்யை விசுவாசிக்கும்படி பரிசுத்த ஆவிக்கு பதிலாக வஞ்சக ஆவியை தேவன் அவர்களுக்குள்ளே நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார். 2Th_2:11-12, 1Sa_16:14, 1Sa_16:16, 1Sa_16:23,

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை முறித்த விசுவாச துரோகிகள், கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள அப்போஸ்தலர்கள், அந்திக்கிறிஸ்துக்கள் ஆகியவர்களிடம்

வெளிப்படுகிற வஞ்சிக்கிற ஆவிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். உங்களது ஆவிக்குரிய மனிதன் உங்கள் மூலம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள் Psa_49:20 , Pro_19:2-3, Hos_4:6, Isa_5:13, Isa_55:1-2, 1Co_3:18, Gal_6:3-4, Col_2:4, Col_2:18-19, 1Th_4:4-8, Heb_3:12-14, Eph_4:14-16, Pro_23:29-33, Eze_33:13,

2-15 பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற மோசேயின் சத்தத்தை கேட்டு கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

பழைய ஏற்பாடு பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை ஆராதனை செய்கிற,தேவனுடைய ஜனங்கள் தங்கள் சத்துருக்களாகிய புறஜாதிகளுக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன்/ ஆரோனுடைய சந்ததியார்கள் அவர்களை நீதியினுடைய கிரியைகளின் வஸ்திரம் இல்லாமல் நிர்வாணமாக்கியிருந்தார்கள்.

தேவனுடைய ஜனங்கள் நிர்வாணமாயிருக்கிறதையும் அவர்களுடைய ஆராதனையின் பாடலின் சத்தம் ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல;என்பதையும் உணர்ந்துகொண்டவர்கள்; கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டு லேவி கோத்திரத்தின் மூலம் தேவனுடைய ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டு, தேவனுடைய நியாத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள் (யாத்திராகமம் 32:25-29)

2-16 புதிய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற தேவனுடைய சத்தத்தை கேட்டு கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ மதத்தின் பிரிவினைகளோடு கலந்த மார்க்கபேதங்களுடைய சபையின் உபதேசங்கள் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பாக நின்றுகொண்டிருக்கிறது.

இவைகளை ஆராதனை செய்கிற,தேவனுடைய ஜனங்களாகிய கிறிஸ்தவர்கள், தங்கள் சத்துருக்களாகிய புறஜாதிகளுக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன்/ ஆரோனுடைய சந்ததியார்கள் அவர்களை நீதியினுடைய கிரியைகளின் வஸ்திரம் இல்லாமல் நிர்வாணமாக்கியிருக்கிறார்கள்.

தேவனுடைய ஜனங்கள் நிர்வாணமாயிருக்கிறதையும் அவர்களுடைய ஆராதனையின் பாடலின் சத்தம் ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும்

அல்ல;என்பதையும் உணர்ந்துகொண்டு; பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் நிமித்தம் தங்கள் இருதயத்தில் பெருமூச்சுவிட்டழுகிறவர்கள் கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டு, ஆவிக்குரிய யூதா கோத்திரத்தின் மூலம் தேவனுடைய ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டு, தேவனுடைய நியாத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள்

இவர்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையின் சீயோன் குமாரத்திகளாக 1,44,000. வரிசையில் தெரிந்துகொள்ளப்பட்டு; தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள்

மற்றும் தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் பெற்றுக்கொள்ளாதவர்களின் தேவனுடைய இரட்சிப்பு மரணமடைகிறது இவைகளைக்குறித்து; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். (எசேக்கியேல் 9:4-10, ஏரேமியா 25:29-30,ஏசாயா 66:6-9)

3-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்

(பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திிற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளின் அடையாளங்கள்.)

பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிற அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து: நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன் பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள். Isa 4:1

பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்ட தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய பிரமாணாங்களின் மூலம் நற்கிரியைகளில் நீதியுள்ளவன் எவனோ,அவன் இன்னும் நீதிசெய்வதற்காகவும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாவதற்காகவும், தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவின்

இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாக சீயோன் குமாரத்திகள் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள்

பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு தப்பின தேவனுடைய ஜனங்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்.

அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது,
சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்.

அப்பொழுது கர்த்தர் சீயோன் மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும், அதின் சபைகளின்மேலும், பகலில் மேகத்தையும் புகையையும், இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப்பிரகாசத்தையும் உண்டாக்குவார்; மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும். பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும். Isa 4:2-6

3-1 கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி சீயோனுக்கு வருகிறார்கள்:-

தேவனுடைய முன் தீர்மானத்தின்படி தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ளுவதற்காக அழைக்கப்பட்ட அநேக கிறிஸ்தவர்களில், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஒரு சிலர் மட்டும்; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பாபிலோனாகிய கிறிஸ்தவ மதத்தின் தாறுமாறுகளின் ஆவிகளிடமிருந்து விடுதலையாக்கப்பட்டு, மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளின் வரிசையில்: சீயோனாகிய தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணங்களுக்கும், எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களிடத்திற்கும் திரும்புகிறார்கள்

Isa_2:2-6, Mic_4:1-4; Isa_4:1-6, Isa_52:4-11, Isa_48:20-22, Isa_66:7-9, Jer_50:8-10, Jer_51:6-14; Jer_51:45-50, Mic_4:10;Zec_2:7-13,Rev_18:1-6,

3-2 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகளுக்கு ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் மணவாட்டி சபையாக தெரிந்துகொள்ளப் பட்டவர்களில் ஒரு சிலர் மட்டும்; உண்மையுள்ளவர்கள் வரிசைக்கு முன்னேறி வந்து சேர்ந்து; ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தை புசிக்கிறார்கள்./ கிறிஸ்துவின் இரகசிய வருகையில் மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்; **இரட்சகராகிய** இயேசுகிறிஸ்து, இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்துகொண்டு: தேவனுடைய சத்தியமான வசனங்களை இருதயத்திலும் அறிவிலும் விருந்தாக புசிக்கிறார்கள்.

Rev_19:7-9, Rev_3:20-21, Mat_22:2-4,Luk_12:32-40,Luk_14:7-11,Luk_14:12-14; Luk_14:15-22;Luk_14:23-24, Est_1:4-8, Est_1:9-12,Isa_65:13-16,Isa_25:6-9, Pro_9:1-6,

3-3 பரிசுத்த ஸ்தலத்தில் / தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தன்னை ஆயத்தம்பண்ணிக்கொள்ளுவதற்காக சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்: கீழே குறிப்பிட்ட மூன்று அசுத்த ஆவிகளிடமிருந்து விலகியிருந்து : தன்னுடைய நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு தனக்கு உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களை தேவனிடத்திலே வாங்கிக் கொண்டு; தன் அவமானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்.

(வலுசர்ப்பம்/, மிருகம்/, கள்ளத்தீர்க்கதரிசி ஆகிய மூன்று பேர்களுடைய வாயிலுமிருந்து புறப்பட்டு வருகிற தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.)

இப்படி தேவனிடத்திலே வெண் வஸ்திரங்களை வாங்கிக்கொண்டு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவர்கள் கிறிஸ்துவின் சிங்காசனத்திலிருந்து ஆட்சி அதிகாரங்களை பரிசாக பெற்றுக் கொள்ளுவதற்காக: அழைக்கப்பட்டவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் உண்மையுள்ளவர்கள், ஆகிய மூன்று நிலைகளில் உறுதியாக நிலைத்திருக்கிறார்கள்; இவர்கள் பரிசுத்த வான்களுடைய நீதியின் கிரியைகளையே, தங்களுடைய நீதியின் வஸ்திரமாக தரித்துக்கொண்டு பூரண புருஷனாகிய கிறிஸ்துவிற்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளுகிறார்கள்

Rev_19:7-8, Rev_3:4-5, Rev_3:18, Isa_61:10, Zec_3:3-4, Mat_22:11-14, Mat_7:21-23, Luk_13:23-27; Psa_45:13-14; Rev_13:8-10, Rev_14:9-12, Rev_16:12-15, Rev_17:13-14, Rev_17:8, Rev_22:14-16, 2Ch_18:18-22; Eze_14:9;

**3-4** பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி

சபையாகிய சீயோன் குமாரத்திகள்; தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்:-

எருசலேம் நகரம்/ தேவனுடைய நாமத்தை தரித்திருக்கிற கிறிஸ்தவர்கள் மத்தியில் செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடுகிறபோது: கீழே விவரிக்கப்பட்ட தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்; தங்கள் நெற்றிகளில் /அறிவில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்

இவர்கள் 1,44,000. வரிசையில் வந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுகிற ஆண்பிள்ளைகளாக முத்திரை போட்டு பிரித்தெடுக்கப்படுகிறார்கள். மற்றும் இந்த தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை பெற்றுக்கொள்ளாதவர்களின் தேவனுடைய இரட்சிப்பு மரணமடைகிறது

1 புறஜாதிகளின் எந்த முறைகளையும் பின்பற்றக்கூடாது.
2 பலிபீடத்தின் பிரமாணங்களை பின் பற்றி நடக்க வேண்டும்.
3 கர்த்தருடைய பஸ்கா விருத்தை புசிக்க வேண்டும்.
4 ஓய்வு நாளை பரிசுசுத்தமாக ஆசரிக்க வேண்டும்.
5 மனச்சாட்சியின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டும்.
6 இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றி நடக்க வேண்டும்.
7 பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

Rev_14:1, Rev_7:3, Rev_9:4, Rev_7:3-4; Eze_9:4-10, Gen_4:11-15, 1Co_3:16-17, 2Co_6:16, 1Pe_4:17-18, Jer_25:29, Isa_66:6, Luk_19:41-46 , Jer_7:11-12, Amo_9:1,

3-5 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவ சுரமண்டலத்தில் சுரமண்டல இராகங்களை வாசித்து தேவனுடைய இரகசியங்களை கற்றுக்கொண்டு தேவனை துதிக்கிறார்கள்:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள், தேவன் தங்களுக்கு கொடுத்த இருதயமாகிய சுரமண்டலத்தில் தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட சுரமண்டலத்தின் ஏழு சுரங்களைப் போல வெளிப்படுகிறவைகளான

(1. தேவனுடைய வேதம். 2. தேவனுடைய வழிகள், 3. நீதி நியாயங்கள். 4. சாட்சிகள். 5. கட்டளைகள் 6. கற்பனைகள் 7.பிரமாணங்கள்) ஆகிய இவைகளுடன் உவமைகளாக உள்ள தேவனுடைய வார்த்தைகளை ஒப்பிட்டு சிந்தித்து தியானிக்கும் போது தேவனுடைய இரகசியங்களை கற்றுக்கொண்டு ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்கிறார்கள்./ கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டிசபையாகிய சீயோன் குமாரத்திகள், தேவனுடைய வார்த்தைகளை

தங்களுடைய இருதயத்தில் விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிக்கிறார்கள்

.Psa_92:2-3, Psa_71:22, Job_30:31, Rev_5:8-10, Rev_15:2-4, Psa_78:2, Eze_20:49, Eze_17:2, Mar_4:10-12, Luk_8:10, Mat_13:10-15, Mat_13:34-35, Isa_6:8-10;, Rev_14:2-3, Psa_49:1-4; Psa_137:1-6; Psa_57:8, Job_30:31; Isa_16:11, Mat_13:11-13

3-6 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் சியோனின் பாட்டாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் கற்றுக்கொண்டு பாடுகிறார்கள்:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசே, மற்றும் **இரட்சகராகிய** இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய உடன் படிக்கையின் பிரமாணங்கள் மற்றும், எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்கள்; ஆகியவைகளின் மூலம் வருகிற ஆசீர்வாதங்களை கற்றுக்கொண்டு பாடுகிறார்கள். Psa_137:1-6; Rev_15:3, Rev_5:8-10, Rev_14:1-5, Rev_20:6, Rev_1:6, Deu_31:30

3-7 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் முன்மாரி, பின்மாரி மழையை பெற்றுக் கொள்ளுகிறார்கள்:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற கிறிஸ்துவின் மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள்; முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியையும், பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியையும்; ஓய்வு நாள் பிரமாணத்தை பின்பற்றி எருசலேமாகிய கர்த்தருடைய வசனங்களில் காத்திருந்து எலியாவின் ஆவியை பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

Act_1:4-8, Act_1:12-15, Act_2:1-4, Deu_11:14, Job_29:23, Pro_16:15, Jer_3:1-5, Jer_5:20-25, Hos_6:1-3, Joe_2:23, Zec_10:1-4, Jam_5:7-8; Joe_2:28-32, Mal_4:4-6,

3-8 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கிற பாழாக்குகிற அருவருப்பிற்கு/ தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்திற்கு விலகியிருந்து; கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் ஊழிய அழைப்பை நிறைவேற்றுகிறபோது பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்:-

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைகிற மணவாட்டி சபையாகிய சீயோன் குமாரத்திகள் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற விசுவாச அளவுப் பிரமாணத்தின் ஊழிய அழைப்பை அறிந்துகொண்டு; தேவனுடைய கற்பனைகளையும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியையும் பின்பற்றி தேவனுடைய சித்தத்தை

நிறைவேற்றுகிறபடியால் இரத்த சாட்சியாக மரித்து பலி பீடத்தின் கீழே வந்து சேருகிறார்கள். /எலியா தீர்க்கதரிசி மற்றும் ஏழாந்தலை முறையான ஏனோக்கை போல நேரடியாக பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும் . ( Rev 13:10 )Rev_1:2, Rev_1:9, Rev_6:9, Rev_12:11, Rev_12:17; Rev_13:10, Rev_14:12, Rev_19:9-10 ;Rev_22:6-9, Rev_22:16, Rev_20:4,

1 வீட்டின் மேலிருப்பவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்குகிறவன் கைவிடப்படுவான்.

2 அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கை விடப்படுவான்.

3 திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.

4 வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கை விடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

Mat_24:14-21; Mar_13:10-18; Luk_17:28-37, Gen_19:17, Gen_19:26; Mat_5:13-16, 2Pe_2:20-22; Rev_1:7,

4-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்.

தேவனுடைய ஜனங்கள் பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கக் காணும்போது, முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டவர்கள்; தாங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்

( லூக்கா 24:49, யோவான் 16:7-11,அப்போஸ்தலர் 1:4-5, அப்போஸ்தலர் 1:8, எபேசியர் 4:30-32 .எபிரேயர் 6:4-8, எபிரேயர் 10:24-31,2பேதுரு 2:20-22)

எருசலேம் நகரத்தில் காத்திருந்து பிதா வாக்குத்தத்தம்பண்ணின முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டவர்கள் பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துகொண்டவர்களாக பரிசுத்த ஆவியில் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், பரிசுத்த ஆவிக்கு சாட்சிகளாயிருங்கள்

எருசலேம் ஆவியின்படி பொருள்:- கர்த்தருடைய வசனங்கள்

யூதேயா ஆவியின்படி பொருள்:- தேவனுடைய பிரமாணங்கள்

சமாரியா ஆவியின்படி பொருள்:- தேவனுடைய பிரமாணங்களும் ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளும் கலப்படமான பிரமாணங்கள்

பூமியின் கடைசிபரியந்தம் ஆவியின்படி பொருள்:- ஜாதிகளின் ஆசரிப்பு முறைகள்

5-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்.

தேவனுடைய ஜனங்கள் பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கக் காணும்போது, தேவதரிசன ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தை பெற்றுகொண்டு ஊழியம் செய்கிறவர்கள்; மனுஷரால் வருகிற மகிமையைத் தேடாமல், தேவனாலேமாத்திரம் வருகிற மகிமைக்காக காத்திருக்க வேண்டும் (யோவான் 7:16-18, யோவான் 5:41-44, யோவான் 12:43-44)

6-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.

பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிற அந்நாட்களிலே; மற்றவர்களுடைய ஆத்துமாவை ஆதாயப்படுத்த கர்ப்பவேதனை படுகிற ஊழியர்களுக்கும், மறுபடியும் பிறந்தவர்களுக்கு கலப்படமான ஞானப்பாலை உபதேசங்களாக போதிக்கிறவர்களுக்கும் ஐயோ (மத்தேயு 16:26,லூக்கா 22:31-32,எரேமியா 51:16, வெளி 18:4-6)

நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார். **Jer 51:6**

பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள். பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும். Jer 51:7-8

பாபிலோனைக் குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக்கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாய மண்டலங்கள் பரியந்தம் எட்டினது. Jer 51:9

கர்த்தர் நம்முடைய நீதியை வெளிப்படுத்தினார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலைச் சீயோனில் விவரிப்போம் வாருங்கள்.
அம்புகளைத் துலக்குங்கள்; கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்; கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார்; பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி. Jer 51:10-11

7-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

தேவனுடைய ஜனங்கள் பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்கக் காணும்போது, அந்நாட்களிலே; முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் பிரமாணங்களும், பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் பிரமாணங்களும், ஓய்வுநாளின் பிரமாணங்களும்/ தேவனுடைய ராஜ்யத்தினுடைய பிரமாணங்களும் நடைமுறைக்கு வருகிறது; ஆகையால் ஒருவனும் தன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் (யாத்திராகமம் 16:22-29. லூக்கா 21:8,)

அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். (மத்தேயு 24:23-26,)

8-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்/ இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

8-1 பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாகிய கிறிஸ்தவ மதத்தின் ஏழு பலத்த/பெரிய சபைகளின்

பிரிவினைகளையும் மார்க்கபேதங்களையும் பின்பற்றி ஆராதனை செய்கிறவர்களுடைய இரட்சிப்பு மரணமடைகிறது;

இதனால் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும்போது அடைக்கப்பட்ட இருதயமாகிய பாதாளத்தின் வாசல்கள் மீண்டும் திறக்கப்பட்டு, பாதாளத்தின் வல்லமைகள் அவனை மேற்கொள்ளுகிறபடியால் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும் வரை மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்

8-2 மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.

பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. (எபிரேயர் 10:28-31, எபிரேயர் 10:24-27, எபிரேயர் 6:4-8, 2பேதுரு 2:20-22)

8-3 இஸ்ரவேலரில் தவறுதலினாலே புறஜாதிகளான கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பு கிடைத்தது.

இப்படியிருக்க, விழுந்துபோகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்கிறேன், அப்படியல்லவே; அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது.

அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும்.

புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்; புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்க வேண்டுமென்று, என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன்.

அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவோ?

மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். Rom 11:11-16

8-4 சுபாவக்கிளைகளாகிய இஸ்ரவேலரை தேவன் தப்பவிடாதிருக்க, காட்டொலிவமரமாகிய கிறிஸ்தவர்களையும் தேவன் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால்,

நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.

நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய். Rom 11:17-22

8-5 சுபாவக்கிளைகளாகிய இஸ்ரவேலர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே.

சுபாவத்தின்படி காட்டொலிவமரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.

இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. Rom 11:23-27

சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே.

ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறதுபோல,

அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள் எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார். Rom 11:28-32

8-6 அநுக்கிரகம் என்னப்பட்ட என் கோலை எடுத்து, நான் அந்த ஜனங்களெல்லாரோடும் பண்ணியிருந்த என் உடன்படிக்கை அற்றுப்போகும்படிக்கு அதை முறித்துப்போட்டேன்.

மேய்ப்பர்களின் மகிமை அழிந்துபோனபடியால், அவர்கள் அலறுகிற சத்தம் கேட்கப்படுகிறது; யோர்தானின் பெருமை அழிந்துபோனபடியால், பாலசிங்கங்கள் கர்ச்சிக்கிற சத்தம் கேட்கப்படுகிறது. என் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், கொலையுண்கிற ஆடுகளை மேய்க்கக்கடவாய்.

அவைகளை உடையவர்கள், அவைகளைக் கொன்றுபோட்டுத் தங்களுக்குக் குற்றமில்லையென்று எண்ணுகிறார்கள். அவைகளை விற்கிறவர்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாங்கள் ஐசுவரியமுள்ளவர்களானோம் என்கிறார்கள்; அவைகளை மேய்க்கிறவர்கள், அவைகள்மேல் இரக்கம் வைக்கிறதில்லை.

நான் இனித் தேசத்துக் குடிகளின்மேல் இரக்கம் வையாமல் மனுஷரில் யாவரையும் அவனவனுடைய அயலான் கையிலும், அவனவனுடைய ராஜாவின் கையிலும் அகப்படப்பண்ணுவேன்; அவர்கள் தேசத்தை அழித்தும், நான் இவர்களை அவர்கள் கைக்குத் தப்புவிப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். Zec 11:3-6

கொலையுண்கிற மந்தையாகிய சிறுமைப்பட்ட உங்களை நான் மேய்ப்பேன்; நான் இரண்டு கோல்களை எடுத்து, ஒன்றிற்கு அநுக்கிரகம் என்றும், ஒன்றிற்கு நிக்கிரகம் என்றும் பேரிட்டு மந்தையை மேய்த்து,

ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அதம்பண்ணினேன்; என் ஆத்துமா அவர்களை அரோசித்தது; அவர்கள் ஆத்துமா என்னையும் வெறுத்தது.

இனி நான் உங்களை மேய்ப்பதில்லை; சாகிறது சாகட்டும், அதமாகிறது அதமாகட்டும்; மீதியானவைகளோவென்றால், ஒன்றின் மாம்சத்தை ஒன்று தின்னக்கடவது என்று நான் சொல்லி,

அநுக்கிரகம் என்னப்பட்ட என் கோலை எடுத்து, நான் அந்த ஜனங்களெல்லாரோடும் பண்ணியிருந்த என் உடன்படிக்கை அற்றுப்போகும்படிக்கு அதை முறித்துப்போட்டேன்.

அந்நாளிலே அது அற்றுப்போயிற்று; அப்படியே மந்தையில் எனக்குக் காத்திருந்த சிறுமைப்பட்டவைகள் அது கர்த்தருடைய வார்த்தையென்று அறிந்துகொண்டன.

உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்னேன்; அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள்.

கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்; இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு; நான் அந்த முப்பது வெள்ளிக்காசை

எடுத்து, அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்துவிட்டேன். Zec 11:7-13

8-7 பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: முடிவு வருகிறது, தேசத்தின் நாலு முனைகளின் மேலும் முடிவு வருகிறது. Eze 7:1-2

இப்போதே உன்மேல் முடிவு வருகிறது; நான் என் கோபத்தை உன்மேல் வருவித்து, உன் வழிகளுக்குத்தக்கதாக உன்னை நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன். Eze 7:3

என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் Eze 7:4 .

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: தீங்கு வருகிறது; இதோ, ஏகமான தீங்கு வருகிறது. முடிவு வருகிறது, முடிவு வருகிறது, அது உன்மேல் நோக்கமாயிருக்கிறது; இதோ, வருகிறது. Eze 7:5-6

தேசத்தில் குடியிருக்கிறவனே, அந்நாளின் விடியற்காலம் வருகிறது, காலம் வருகிறது, அமளியின் நாள் சமீபித்திருக்கிறது, மலைகளில் சந்தோஷசத்தம் இல்லை. Eze 7:7

இப்பொழுது விரைவில் என் உக்கிரத்தை உன்மேல் ஊற்றி, என் கோபத்தை உன்னில் தீர்த்துக்கொண்டு, உன்னை உன் வழிகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்த்து, உன் எல்லா அருவருப்புகளின் பலனையும் உன்மேல் வரப்பண்ணுவேன். Eze 7:8

என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்குத்தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்குத்தக்கது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது அடிக்கிறவராகிய நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். Eze 7:9

இதோ, அந்த நாள், இதோ, வருகிறது, அந்நாளின் விடியற்காலம் உதிக்கிறது, மிலாறு பூக்கிறது, அகந்தை செழிக்கிறது. Eze 7:10

அக்கிரமத்துக்கு மிலாறாகக் கொடுமை எழும்புகிறது; அவர்களிலும் அவர்களுடைய திரளான கும்பிலும் அவர்களுடைய அமளியிலும் ஒன்றும் மீதியாயிருப்பதில்லை; அவர்கள் நிமித்தம் புலம்பல் உண்டாயிருப்பதுமில்லை. Eze 7:11

அந்தக் காலம் வருகிறது, அந்த நாள் கிட்டுகிறது; கொள்ளுகிறவன் சந்தோஷப்படாமலும், விற்கிறவன் துக்கப்படாமலும் இருப்பானாக; அதின் திரளான கும்பின்மேலும் உக்கிரம் இறங்கும். Eze 7:12

அவர்கள் ஜீவனுள்ளோருக்குள்ளே இன்னும் உயிரோடிருந்தாலும், விற்றவன் விற்கப்பட்டதற்குத் திரும்பிவருவதில்லை; அதின் திரளான கும்பின்மேலும் உண்டான

தரிசனம் திரும்பாது; தன் அக்கிரமத்திலே வாழுகிற எவனும் தன்னைத் திடப்படுத்தமாட்டான். Eze 7:13

அவர்கள் எக்காளம் ஊதி, எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியும், யுத்தத்துக்குப் போகிறவனில்லை; என் உக்கிரம் அதின் திரளான கும்பின்மேலும் இறங்குகிறது. Eze 7:14

வெளியே பட்டயமும் உள்ளே கொள்ளைநோயும் பஞ்சமும் உண்டு; வயல்வெளியில் இருக்கிறவன் பட்டயத்தால் சாவான்; நகரத்தில் இருக்கிறவனையோ பஞ்சமும் கொள்ளைநோயும் பட்சிக்கும். Eze 7:15

அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள்; ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள். Eze 7:16

எல்லாக் கைகளும் சலித்து, எல்லா முழங்கால்களும் தண்ணீரைப்போல் தத்தளிக்கும். இரட்டை உடுத்திக்கொள்வார்கள்; தத்தளிப்பு அவர்களை மூடும்; எல்லா முகங்களும் வெட்கப்படும், எல்லாத் தலைகளும் மொட்டையிடப்படும். Eze 7:17-18

தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டாவெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது. Eze 7:19

அவருடைய சிங்காரத்தின் மகிமையை அகந்தைக்கென்று வைத்து, அதிலே அருவருக்கப்படத்தக்கதும் சீயென்றிகழப்படத்தக்கதுமான காரியங்களின் விக்கிரகங்களை உண்டுபண்ணினார்கள்; ஆகையால் நான் அவைகளை அவர்களுக்கு வேண்டாவெறுப்பாக்கி, அதை அந்நியர் கையிலே கொள்ளையாகவும், பூமியில் துஷ்டர்களுக்குச் சூறையாகவும் கொடுப்பேன்; அவர்கள் அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள் Eze 7:20-21.

என் முகத்தை அவர்களை விட்டுத் திருப்புவேன்; அதினால் என் அந்தரங்க ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள்; பறிகாரர் அதற்குள் பிரவேசித்து, அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவார்கள். ஒரு சங்கிலியைப் பண்ணிவை; தேசம் நியாயத்தீர்ப்புக்குள்ளான இரத்தப்பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரம் கொடுமையால் நிறைந்திருக்கிறது. Eze 7:22-23

ஆகையால் புறஜாதிகளின் துஷ்டர்களை வரப்பண்ணுவேன், அவர்கள் இவர்களுடைய வீடுகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்; பலவான்களின் பெருமையை ஒழியப்பண்ணுவேன், அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பரிசுத்தக்குலைச்சலாகும். Eze 7:24

சங்காரம் வருகிறது; அப்பொழுது சமாதானத்தைத் தேடுவார்கள்; ஆனாலும் அது கிடையாது. விக்கினத்தின்மேல் விக்கினம் வரும்; துர்ச்செய்தியின்மேல் துர்ச்செய்தி பிறக்கும்; அப்பொழுது தீர்க்கதரிசியினிடத்திலே தரிசனத்தைத் தேடுவார்கள்; ஆனாலும்

ஆசாரியனிடத்திலே வேதமும் மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்துபோகும். Eze 7:25-26

ராஜா துக்கித்துக்கொண்டிருப்பான்; பிரபுவைத் திகில் மூடிக்கொண்டிருக்கும்; தேசத்து ஜனங்களின் கைகள் தளர்ந்துபோகும்; நான் அவர்கள் வழிகளின்படியே அவர்களுக்குச் செய்து, அவர்கள் நியாயங்களின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்றார். Eze 7:27

8-8 பின்னும், அவர் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். Rev 22:10-11

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். Rev 22:12

ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். Rev 22:14-15

சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார். ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன். Rev 22:16-17

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். Rev 22:18

ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார். Rev 22:19

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் Rev 22:20-21

யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான். Joh 3:27

என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.( Joh 6:44-45 )

9-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்// இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் மூலம் பரலோக இராஜ்ஜியத்தை திறக்கிறவர்களின் அடையாளங்கள்

9-1 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காண்பதற்கு முதலாவது திறவுகோல், ஒருவன் ஜலத்தினால்/ தேவனுடைய வார்த்தைகளினால் மறுபடியும் பிறப்பது :-

ஜலமாகிய தேவனுடைய வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள்/ தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில் ஏற்றுக் கொண்டு தங்கள் மனிதனுடைய ஆலோசனைகளை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து மனந்திரும்புகிறவர்களுக்கு ஆவிக்குரிய கண் பார்வை கிடைக்கிறது;

தேவனுடைய இராஜ்ஜியம் இதோ இங்கே இருக்கிறது, அதோ அங்கே இருக்கிறது என்று , யாரையும் பின்பற்ற வேண்டாம் அல்லது எந்த இடத்திற்கும் ஓட வேண்டாம், நீங்கள் இருக்கிற இடத்திலிருந்தே தேவனுடைய இராஜ்ஜியத்தை உங்கள் ஆவிக்குரிய கண்களால் பார்க்க முடியும்.. Joh 1:31, Joh 3:23, Luk 7:29-30, Mar 16:16, Luk 3:7, Luk 3:12, Mar 9:1, Luk 9:24-27 ,Joh 3:3, Luk 17:20-23,Tit 3:5, 1Pe_1:23,1Pe_3:21,

9-2 ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனந்திரும்பி மறுபடியும் பிறந்தவர்களுடைய ஆவிக்குரிய மனிதன் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்/ களங்கமில்லாத ஞானப்பால்:-. 1Pe_2:2-3, Heb_6:1-2, Heb_5:12-14,

9-2-1. செத்த கிரியைகளிலிருந்து நீங்கலாகும் மனந்திரும்புதல்/ ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உண்டாக்கும் கிரியைகளிலிருந்து மனந்திரும்புதல்

9-2-2. தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்/ இயேசு, கிறிஸ்துவினுடைய விசுவாசத்தின் சுவிசேஷம்

9-2-3. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்

9-2-4. கைகளை வைக்குதல் /ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணம்

9-2-5. மரித்தோரின் உயிர்த்தெழுதல் தெழுதல் /இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

9-2-6. நித்திய நியாயத்தீர்ப்பு

9-2-7. நீதியின் வசனம் / பிரமாணம்

9-2-8. நீதியின் வசனத்தின் ஊழியத்தில் பங்கு பெறுதல் Heb 5:12-14, Heb 6:1-2 Rom 10:6-10 Deu 30:11-16

9-3 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள் பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு இரண்டாவது திறவுகோல்; ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது :-

ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனந்திரும்பி மறுபடியும் பிறந்தவர்களுடைய ஆவிக்குரிய மனிதன் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களினால் தீமையை வெறுத்து, நன்மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைகிறது. இந்த நிலையில் ஒருவன் தன்னுடைய மனிதனின் ஆவியை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து பரிசுத்த ஆவியுடன் உடன்படிக்கை செய்து பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்போது; அவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறான், அல்லது அவனுக்குள்ளே தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது.

Joh 3:3-5, Heb 5:12-14, Mat 16:24-28, Joh 3:5, Mat 12:28, Luk 11:20, Jam 1:17-18, Tit 3:5,

9-4 கீழே விவரிக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகளை பரிசுத்த ஆவியினால் சித்தித்து, தியானிக்கும்போது; தங்களுடைய ஆவி, ஆத்துமா தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசித்து பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை புசித்து பிழைக்கிறது.

9-4-1 நியாயப்பிரமாணம், தீர்க்க தரிசனங்கள், பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது. Rom 3:20-22, Mat 5:17, Mat 7:12, Mat 22:36-40, Luk 16:16-17, Mat 11:13-15, Luk 1:17, Mal 4:6, Isa_3:4-5, Hos_6:1-3, Luk_12:2-3, Luk_8:17-18, Luk_9:16-17

9-4-2 தேவனுடைய இராஜ்ஜியத்தின் உவமைகளில் சுரமண்டலத்தின் ஏழு சுரங்களைப் போல வெளிப்படுகிற (1. தேவனுடைய வேதம். 2. தேவனுடைய வழிகள் 3. நீதி நியாயங்கள். 4. சாட்சிகள். 5. கட்டளைகள் 6. கற்பனைகள் 7. பிரமாணங்கள்) ஆகிய ஏழு தேவனுடைய வார்த்தைகள் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Psa_92:2-3, Psa 71:22, Job 30:31, Rev 5:8-10, Rev 15:2-4, Psa 49:4, Psa 78:2, Eze 20:49, Eze 17:2, Mar 4:10-12, Luk 8:10, Mat 13:10-15, Mat 13:34-35, Isa 6:8-10

9-4-3 வேதம், கிறிஸ்துவின் சாட்சி ஆகமம் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது. Isa 8:16-20, 2Pe 1:16-21, Isa 50:10-11, Isa 41:21-24, Joh 10:35, Rev 1:2, Rev 1:9, Rev 6:9, Rev 12:11, Rev 12:17, Rev 14:12, Rev 19:9-10 , Rev 20:4

9-4-4 நித்திய ஜீவ வார்த்தைகள் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Joh_5:39; Mat_22:29; Luk_24:44-47; Joh_6:27, Joh_6:40, Joh_6:63,

9-4-5 வேதத்தில் திருட்டாந்தமாக/உதாரணமாக எழுதப்பட்டவைகள் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது 1Co_10:11, Heb_4:10-11,

9-4-6 வேதத்தில் நிழலாட்டமாக/ ஞான அர்த்தமுள்ளவைகளாக எழுதப்பட்டவைகள் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Heb_10:1, Heb_8:5, Heb_9:23, Gal_4:24, Rev_11:8,

9-4-7 வேதத்தில் தீர்க்க தரிசனங்களாக எழுதப்பட்டவைகள் பலமான ஆகாரமான தேவ நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது 2Pe_1:20-21, 2Ti_3:16; 1Pe_1:11, Rev_19:10

9-4-8 ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தை புசித்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்:-

இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தினுடைய ஆட்சியின் பதவிகளை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

இவர்கள் பரிசுத்த ஆவியின் உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன்னேறும்போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவனுடைய சித்தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் Rev_19:1-9 Mat_13:10-15, Rev_3:20-22

9-5 தேவனுடைய நீதியின் கிரியைகள்இல்லாமல் கண்சொருகிப்போன குருடர்கள்:-

ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனந்திரும்பி மறுபடி பிறந்தும், பரிசுத்த ஆவியினால் மறுபடி பிறந்தும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரகசியங்களுக்குள்ளே பிரவேசிக்கிறவர்களுக்கு தேவ நீதியின்படி நற்கிரியைகள் இல்லாதபோது; தேவனுடைய இராஜ்ஜியத் தின் தரிசனங்களை இழந்து மீண்டும் ஆவிக்குரிய குருடர்களாக மாறுகிறார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தின் வழிகளை காட்டும்போது, குருடனுக்கு வழி காட்டுகிற குருடனாக இருக்கிறார்கள் 2Pe_1:4-11, 2Pe_2:20-22; Heb_6:4-8; Heb_10:26-31 Mat_22:8-14,Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12,

10-0 தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்// இருதயத்தில் நிற்கக் காணும்போது, மனந்திரும்புங்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது

பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் மூலம் பரலோக இராஜ்ஜியத்தை பூட்டுகிறவர்களின் அடையாளங்கள்

10-1 ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காணமல் இருப்பதற்காக,

பரலோக இராஜ்ஜியத்தை பூட்டுவதற்கு பயன்படுத்தும் முதலாவது திறவுகோல்;

ஒருவன் ஜலத்தினால்/ தேவனுடைய வார்த்தைகளினால் மறுபடியும் பிறக்காமல் இருப்பது.

ஜலத்தினால்/ தேவனுடைய வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறவர்கள் கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில்/ இருதயத்தில் ஏற்றுக் கொண்டு மனந்திரும்பாமல்; தங்கள் மனிதனுடைய ஆலோசனை களினால் தன்னுடைய ஆத்துமாவில் பிழைக்கிறவர்கள் ஆவிக்குரிய குருடர்கள்; இவர்கள் மற்றவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தின் வழிகளை காட்டும்போது, குருடனுக்கு வழி காட்டுகிற குருடனாக இருக்கிறார்கள் Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12,

10-2 ஜலத்தினால் மறுபடியும் பிறக்காமல் / தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, மனந்திரும்பாமல்; அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து பேசும்போது ; தங்களுடைய மாயக்காரனுடைய ஆத்துமா வளர்ச்சியடைய மனுஷரால் உருவாக்கப்பட்ட சபையின் மூல உபதேச வசனங்கள்../ கலப்படமான ஞானப்பால்:-

10-2-1. இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை அறிக்கை செய்தல் Rom_10:9-10 10-2-2. பாவ மன்னிப்பிற்கு இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுதல் Act_2:38 10-2-3. ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுதல் Mar_16:16 10-2-4. அந்நிய பாஷையைப் பெற்றுக் கொள்ளுதல் Act_2:1-4 10-2-5. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல் Heb_10:25 10-2-6. காணிக்கை, தசமபாகம் செலுத்துதல் Mal_3:8-10 10-2-7. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல் 1Co_11:23-27, Isa_4:1 10-2-8. தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறுதல் Mar_16:15

10-3 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காணமல் இருக்கிற ஆவிக்குரிய குருடர்கள்

பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே மனுஷர் பிரவேசிக்காமல் இருப்பதற்காக; பரலோக இராஜ்ஜியத்தை பூட்டுவதற்கு பயன்படுத்தும் இரண்டாவது திறவுகோல், ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்காமல் இருப்பது:-

ஜலத்தினால் மறுபடியும் பிறக்காமல்/ தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, மனந்திரும்பாமல்; அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து பேசும்போது ; தங்களுடைய

மாயக்காரனுடைய ஆத்துமா; தீமையை வெறுத்து, நன்மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடையாமல் இருக்கிறது.

இந்த நிலையில் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால், பரிசுத்த ஆவிக்கு பதிலாக அர்த்தமில்லாத அந்நியபாஷையின் மூலம் பைத்தியத்தின் ஆவி /கனநித்திரையின் ஆவி/ தாறுமாறுகளின் ஆவி இவர்களை அடிமைப்படுத்துகிறது, இவர்களுடைய ஆவிக்குரிய மனிதன் மனுஷரால் உருவாக்கப்பட்ட உபதேசங்களை விரும்பி புசித்து. மனிதனுடைய நீதியின் வசனத்தை புசிப்பதற்கு முன்னேறுகிறான்.

Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12, 1Co_14:1-15, , 1Co_14:24-27, Isa_5:11-14, Isa_28:8-12, Isa_19:14, Isa_29:9-14,

10-4-0 கீழே விவரிக்கப்பட்டுள்ள மனுஷரால் உருவாக்கப்பட்ட உபதேசங்களை அர்த்தமில்லாத அந்நியபாஷையின் மூலம் பைத்தியத்தின் ஆவி /கனநித்திரையின் ஆவி/ தாறுமாறுகளின் ஆவியினால் தங்களுடைய மாயக்காரனுடைய ஆவி, ஆத்துமா மனிதனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசித்து மனிதனுடைய நீதியின் வசனத்தை புசித்து பிழைக்கிறது.

10-4-1 புளிப்புள்ளஅப்பங்கள் :- பரிசேயர் மற்றும் சதுசேயரின் உபதேசங்கள். மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Mat_16:11-12, Mar_8:15, Luk_12:1, Gal_5:9, Mar_8:14-15, 1Co_5:6-8

10-4-2 மனிதனுடைய கற்பனைகளாகிய அப்பங்கள்:- மனிதன் உருவாக்கின உபதேசங்கள் மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Mat_15:8-9, Mar_7:6-8, Lev_26:26, Isa_29:10-14

10-4-3 சொந்தமாக உருவாக்கின அப்பங்கள்:- சொந்தமாக உருவாக்கின உபதேசங்கள் மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Isa_4:1, Jer_7:18, Isa_28:7-13, Jer_44:17-18

10-4-4 இரகசியமான அப்பங்கள் :- வேத வசனங்களின் இரகசியங்களை மட்டும் தேடி தங்களுடைய ஆவிக்குரிய அப்பங்களாக புசிப்பது. மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது

Pro_9:13-18, Pro_5:3-7, Pro_7:1-5, Pro_2:16-20, Pro_6:23-24, Pro_22:14, 1Co_13:1-2

10-4-5 கல்லுகளை அப்பங்களாக மாற்றி புசிப்பது :- உபவாசத்திற்கு பின்பு தங்களுடைய இருதய ஆலோசனைகளினால் திரளாக பொங்கி வருகிற பொய்யான மாயைகளின் புதிய வெளிப்பாடுகள் / தரிசனங்களை தங்களுடைய ஆவிக்குரிய அப்பங்களாக புசிப்பது. மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது Luk_4:1-4, Isa_58:1-7

10-4-6 அசுத்தமான அப்பங்கள் :- தசமபாகம் / காணிக்கை /பொருத்தனை / ஆகிய தேவனுடைய காரியங்களில் அவைகளின் பிரமாணங்களின் படி தேவனுக்கு செலுத்தாமல் தேவனை வஞ்சிக்கிறபோது; தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கி தேவனையும் மனிதனையும் ஏமாற்றுவது. மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது

Mal_1:6-8, Mal_1:12-14, Psa_69:21-24, Rom_11:7-10, 1Co_10:21-23, 1Co_11:27-32

10-4-7 மேஜையிலிருந்து கீழே விழுந்த அப்பங்கள் :- பரிசுத்தவான்கள் செய்த தவறுதல்களை / பாவங்களை தானும் செய்து, தன்னுடைய கிரியைகளை நியாயப்படுத்துவது. மனிதனுடைய நீதியின் வசனத்தை வெளிப்படுத்துகிறது 1Sa 3:19, 2Ki 10:10, Joh 7:8-10, Rom 3:7

10-4-8 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து, அவைகளை தங்கள் வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்துக் கொண்டு பேசுகிறவர்கள்; எப்பொழுது மனந்திரும்பி/ பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைத் திருக்கிறார்களோ, அப்பொழுது தங்களுடைய ஆத்துமாவில் தேவனுடைய வார்த்தைகளை புசித்து தேவ நீதியில் பிழைக்கவே பிழைக்கலாம். Rev 3:19-22, Heb 9:1-4, Heb 9:6-8, Heb 9:9-10, Heb 9:13, Heb 9:11-12, Heb 9:14, Heb 10:19-22, 1Pe 3:18-19, Rom 8:1-4, Rom 7:22-25, Job 28:12-14, Job 28:20-22

10-5-0 மனுஷரால் உருவாக்கப்பட்ட உபதேசங்கள் மூலம் ஊழியர் அழைப்பில் மனிதனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்:-

பிரதான ஆசாரியர்களும், லேவியர்களும் தேவனுடைய ஊழியர் உடன்படிக்கையை தள்ளி விட்டு, ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளுடன் கலந்து, கலப்பட ஆசரிப்பு முறைகளை பின்பற்றுகிறபடியால் தேவனுடைய வார்த்தைகளில் கலப்பட பாஷைகள் பெருகுவதற்கு காரணமாக இருக்கிறார்கள். இவர்கள் ஊழியர் அழைப்பில் மனிதனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள் Ezr 9:1-2, 2Ch 36:14-17, Mal 2:10-16,Mal 2:1-9, Isa 28:7-8, Jer 6:10-15, Eze 3:17-21, Eze 34:1-10, Hos 4:1-6,

10-5-1 தேவ பக்தியுள்ள சந்ததியை உருவாக்கும் பரிசுத்த வித்து / தேவனுடைய வார்த்தைகளில் எகிப்து / கானான் தேசத்து ஜாதிகளுடன் கலந்து போயிற்று. எகிப்து தேசத்தின் ஜாதிகள்:-1. ஏதோமியர் 2. மோவாபியர் 3 இஸ்மவேலர்4. அம்மோனியர் 5. அசீரியர் 6. கேபாலர்7. அமலேக்கியர் 8. பெலிஸ்தியர். கானான் தேசத்து ஜாதிகள்:- 1. ஏத்தியர்2. கிர்காசியர்3. எமோரியர்4. கானானியர்5. பெரிசியர்6. ஏவியர்7. எபூசியர் Lev 18:1-5, Psa 83:1-12, Lev 18:1-5, Deu 7:1-6,

10-5-2 தேவ பக்தியுள்ள சந்நதியை உருவாக்கும் பரிசுத்த வித்தான தேவனுடைய வார்த்தைகள், எகிப்து, கானான் தேசத்து ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளுடன் கலந்து போயிற்று. 1Sa 3:11-14, 1Sa 4:17-18, Isa 28:7-8, Jer 6:13-15, Mal 2:5-9, Rom 16:17-18, Eze 3:17-21, Eze 33:6-9, Eze 34:1-10, Lev 10:1-3, Isa 59:13-16, Num 22:9-12, Num 22:20-22, Num 20:7-13, Due 3:23-27, Psa 106:32-33,Ezr 9:1-2, 2Ch 36:14-19, Neh 13:23-24, Mal 2:11-16, 2Ki 17:6-12, 2Ki 17:13-23, 2Ki 17:24-31, 2Ki 17:32-41,

10-5-3 ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள்/கிறிஸ்தவர்கள் எகிப்து கானான் தேசத்து ஜாதிகளுடன் இணைந்து அவர்களுடைய அருவருப்புகளை பின் பற்றினபடியால், தேவனுடைய ஆசரிப்பு முறைகளுடன், ஜாதிகளின் ஆசரிப்பு முறைகள் கலந்து ஊழியத்தில் ஒரு வினோதமான கலப்பட ஆசரிப்பு முறைகள் அந்தந்த ஜாதிகளின் குணாதியசயங்களுக்கேற்றபடி நாளுக்கு நாள் உருவாகி பெருகிக் கொண்டிருக்கிறது.

ஆவிக்குரிய இஸ்ரலேவர்கள்/கிறிஸ்தவர்கள் எகிப்து / கானான் தேசத்து ஜாதிகளின் ஆசாரிப்பு முறைகளுடன் இணைந்து உருவான சபை ஆராதனை ஒழுங்குகளில், கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொள்ளுவதில் ஒற்றுமையாகவும், தங்களுடைய ஆவிக்குரிய ஆகாரமான தேவனுடைய வார்த்தைகளைப் புசிப்பதிலும், தங்களுடைய நீதியின் வஸ்திரமான நீதியின்

கிரியைகளை செய்வதிலும், அந்தந்த ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளின் குணாதிசயங்களுக்கேற்றபடி, பிரிவினைகளோடும் மார்க்க பேதங்களோடும் பிரிந்து இருக்கிறார்கள். இவர்கள் ஊழியர் அழைப்பில் மனிதனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்

10-5-4 தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் புறஜாதிகளின் சிறையிருப்பிலிருக்கிற / அடிமைத்தனத்திலிருக்கிற அருவருக்கப் படதக்கதையும் அசுத்தமானவைகளையும் அகற்றி, தேவனுடைய கட்டளைகளின்படி நடக்க முன் வருகிறவர்கள் எவர்களோ; அவர்களுக்கு தேவன் புதிய ஆவியையும் புதிய இருதயத்தையும் கொடுத்து, தங்களது வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களை திரும்பக் கொடுப்பார். Eze 20:40-44, Hos 7:1-14, Jer 24:1-7,

# முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப்பார்கள். மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும்.

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள்.

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்கு செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள். 1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 2 தேடுகிறவர்கள் 3 மற்றவர்கள்

1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :- தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 2 தேடுகிறவர்கள்:- தேவ நீதியை தேடுகிறவர்களின் ஆவிக்குரிய இடறுதல்களில் விழுந்துகொண்டிருக்கிறார்கள்.

1 தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல்.

2 . நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப்பிரமாணத்தை தேடுவது.

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது.

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட தேவனிடம் கேட்பது.

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும்படி தேவனை நோக்கி கேட்பது.

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்கார ணம் ஏனென்றால் அவர்கள்

தேவ அறிவை வெறுத்தார்கள்.

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்லுவது.

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்

3. மற்றவர்கள்:- சூதும் வங்சகமுகமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும்

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு, புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுதும் தீமை செய்வதிலிருந்து மனந்திரும்புகிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்ளுகிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள். . ஆமென்.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து என் சிறுவயதிலே பெற்றோர் மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். கடந்த முப்பது வருடங்களாக தேவனுடைய வார்த்தைகளைக் கண்டு,கேட்டு, உணர்ந்துகொண்டபடியால்; பரலோக இராஜ்யத்தினுடைய உவமைகளில் உள்ள இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை ஆவி,ஆத்துமாவில் புசித்து மறுரூபமடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

1. பாழாக்குகிற அருவருப்பு / தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் பரிசுத்த ஸ்தலத்தில் நின்றுகொண்டிருக்கிறது

2. **தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது**

3. **தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி**

4. **கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்**

5. **ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்**

6. **நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து**

7. **தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்**

8. **தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்**

9. **பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்**

10. **இந்த மனுஷகுமாரன் யார்?**

11. **ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்**

12. **தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்**

13 **தேவனுடைய நாமத்தை பின்தொடர்கிற நாண்கு வகையான ஜனங்கள்**

14 **ஞான அர்த்தமுள்ள சீயோனின் வெளிப்பாடுகள்**

இந்த புஸ்தகங்களின் தலைப்புக்கள் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு,புசிக்க ஏற்**றபடி/ அவரவர் உட்கொள்**ளும் அளவுக்கே**றபடி/தன்மைக்**கேற்**றபடி பரிமாறப்படுகிறது.**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்** தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால் தேவனால் முன் கு**றிக்கப்பட்டவர்க**ளிள் ஒரு சிலர், **இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண** விருந்தில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை உ**ணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில்**, மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின்

மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.